**செய்தி வெளியீடு எண்: 966** **நாள்:17.12.2020**

**<u>இன்று (17.12.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரம், லத்துவாடியில் அமைக்கப்பட்டுள்ள முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்கை திறந்து வைத்து ஆற்றிய உரை:</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

அனைவருக்கும் வணக்கம்.

இன்றைக்கு மாண்புமிகு அம்மாவின் அரசு தமிழ்நாடு முழுவதும் ஏழை, எளிய மக்களுக்கு மருத்துவ சேவை அளிக்க வேண்டுமென்பதற்காக 2000 முதலமைச்சர் அம்மா மினி கிளினிக் துவக்கப்படும் என்ற அறிவிப்பை அறிவித்து, துரிதமாக அந்தப் பணியைத் துவக்கி, கடந்த 14ஆம் தேதி சென்னையிலே நானும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சுகாதாரத் துறையின் செயலாளர் உட்பட பல்வேறு அதிகாரிகள் அந்த நிகழ்ச்சியில் பங்குபெற்று, சென்னையிலே முதல்கட்டமாக துவக்கி வைத்தோம். அந்த மூன்று அம்மா மினி கிளினிக் துவக்கப்பட்டவுடன், இந்த டிசம்பர் மாதம் 31ஆம் தேதிக்குள் தமிழ்நாடு முழுவதும் மாண்புமிகு அம்மாவின் அரசு அறிவித்த 2000 முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் முழுவதும் திறக்க வேண்டுமென்று உத்தரவை வழங்கி, அதற்கிணங்க நேற்றையதினம் சேலத்தில் கொண்டலாம்பட்டியில் நான் துவக்கி வைத்தேன். இன்றையதினம் நீங்கள் ஆவலோடு எதிர்பார்க்கின்ற லத்துவாடியில் இப்போது துவக்கி வைத்திருக்கின்றேன்.

கிராமத்தில் வாழ்கின்ற மக்களுக்கு அந்தப் பகுதியிலேயே, முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் துவங்குகின்றபோது, அவர்களுக்கு காய்ச்சல், தலைவலி மற்றும் சிறிய நோய்கள் ஏற்பட்டால் உடனடியாக அம்மா மினி கிளினிக்கை நாடி தங்களுடைய நோயை குணப்படுத்திக் கொள்வதற்கு இங்கேயே ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு உதவியாளர் காலை 8 மணி முதல் மதியம் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 7 மணி வரையிலும் இருந்து, அங்கு வருகின்ற நோயாளிகளுக்கு பரிசோதனை செய்து உரிய மருத்துவ சிகிச்சை அளிப்பார்கள். ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருக்கும் அனைத்து மருந்துகளும் அம்மா மினி கிளினிக்கிலும் வைக்க வேண்டுமென்ற உத்தரவை வழங்கியுள்ளோம். எனவே, கிராமத்தில் வாழ்கின்ற குறிப்பாக ஏழை, எளிய

மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதிகளில் அம்மா மினி கிளினிக் துவங்க வேண்டுமென்று உத்தரவை வழங்கியிருக்கின்றோம்.

கிராமங்கள் சூழ்ந்த பகுதி இந்தப் பகுதி. இரவு, பகல் பாராமல் நிலத்திலே உழைக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் மற்றும் விவசாயத் தொழிலாளிகள் நிறைந்த பகுதி ஆகும். நானும் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன். இன்றைக்கும் நான் விவசாயம் செய்து கொண்டிருக்கின்றேன். வெயிலிலும், மழையிலும் நனைந்து இரத்தத்தை வியர்வாக மண்ணிலே சிந்தி உழைக்கின்ற வர்க்கம் விவசாய வர்க்கம், விவசாயத் தொழிலாளி. அப்படிப்பட்ட உழைக்கும் வர்க்கத்திற்கு, இந்த நாட்டுக்கு உணவு அளிக்கின்ற விவசாயி, விவசாயத் தொழிலாளிகளுக்கு நல்ல மருத்துவம் கிடைக்க வேண்டுமென்பதற்காகத் தான் இந்த முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் துவக்கியிருக்கின்றோம். இதன்மூலம், இந்த சுற்றுவட்டாரத்தில் உள்ள பொதுமக்கள், ஏதாவது சிறிய நோய்கள் ஏற்படின் இங்கு சிகிச்சை எடுத்துக் கொள்ளலாம். ஏதாவது அறுவை சிகிச்சை செய்யவேண்டுமென்ற சூழ்நிலை ஏற்பட்டால் இங்கிருக்கின்ற மருத்துவர்கள் பரிசோதனை செய்து, தாலுகா மருத்துவமனைக்கோ அல்லது சேலத்தில் இருக்கும் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவமனைக்கோ அனுப்பி, அவர்களுக்கு உரிய சிகிச்சை அளித்து, குணமடையச் செய்வோம்.

இது மட்டுமல்ல. நடமாடும் மருத்துவக் குழுவும் வைத்திருக்கின்றோம். நோய் அதிகமாக இருக்கிறது என்று கண்டறியப்படும் கிராமங்களுக்கு உடனடியாக அந்த மருத்துவக் குழு சென்று, அவர்களுக்கு உரிய சிகிச்சை அளித்து குணமடையச் செய்யக்கூடிய நிலையை அம்மாவினுடைய அரசுதான் உருவாக்கித் தந்திருக்கின்றது. அதுமட்டுமல்ல, கிராமத்திலிருக்கின்ற மக்கள் நகரத்திற்கு சிகிச்சை செல்ல வேண்டுமென்றால் போதிய வாகன வசதியில்லாத ஒரு சூழ்நிலையில் அவர்களுக்கு வாகன வசதி கொடுக்க வேண்டுமென்பதற்காக, புதிதாக 500 எண்ணிக்கையில் 108 வாகனங்களை தந்த அரசு அம்மாவினுடைய அரசு.

தொடக்க காலத்தில் தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோய் கடுமையாக இருந்தது. அதை கட்டுப்படுத்தி, படிப்படியாகக் குறைத்து, இந்தியாவிலேயே இறப்பு சதவீதம் குறைந்துள்ள மாநிலம் தமிழ்நாடு. கேரளாவைப் பார், டெல்லியைப் பார் என்று இங்கே இருக்கும் எதிர்க்கட்சித் தலைவரிலிருந்து பல்வேறு கட்சித்

தலைவர்களெல்லாம் விமர்சனம் செய்தார்கள். இப்போது தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது. கேரளாவிலும், டெல்லியிலும் அதிகமாகியிருக்கிறது. இப்போது அதைப்பற்றி எதுவும் பேசுவதில்லை. வேண்டுமென்றே திட்டமிட்டு அரசியல் செய்கின்ற அரசியல் தலைவர்களுக்கு மத்தியில் அம்மாவின் அரசு மக்களுடைய எண்ணங்களை நிறைவேற்றுகின்ற அரசாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதில் நம் மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள் அர்ப்பணிப்போடு ஈடுபட்டார்கள். அவர்களுக்குத் துணையாக பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் ஒருங்கிணைந்து பணியாற்றிய காரணத்தால் தமிழகத்தில் படிப்படியாக கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமங்கள் வளர வேண்டும். கிராமத்தில்தான் அதிகமான அரசுப் பள்ளிகள் இருக்கின்றன. அரசுப் பள்ளிகளில் 41 சதவீதம் மாணவர்கள் படிக்கின்றார்கள். அதாவது, தமிழ்நாட்டில் மேல்நிலைப் பள்ளிகளில் 8 லட்சத்திற்கும் மேலாக பயில்கின்ற மாணவர்களில், அரசுப் பள்ளிகளில் மட்டும் சுமார் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கின்றார்கள். அதில், கடந்த ஆண்டு 6 மாணவர்களுக்குத் தான் மருத்துவப் படிப்பிற்கான இடம் கிடைத்தது. கிராமப்புறங்களில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை, எளிய மாணவ, மாணவியர்களின், மருத்துவராக வேண்டுமென்ற கனவை நனவாக்குவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு 7.5 விழுக்காடு உள் ஒதுக்கீட்டை அளித்து இந்த ஆண்டு 313 மாணவ, மாணவியர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்துள்ளது, இது ஒரு வரலாற்றுச் சாதனை.

நீட் தேர்வை திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகித்த காங்கிரஸ் அரசு கொண்டு வந்தது. அப்போது, 41 விழுக்காடு அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு 40 இடங்கள் மட்டுமே மருத்துவக் கல்லூரியில் பயில இடம் கிடைத்தது. நீட் தேர்விற்கு முன்பு, திராவிட முன்னேற்றக் கழக அரசில், நுழைவுத் தேர்வு மூலமும் 40 மாணவ, மாணவியர்களுக்குத்தான் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தது. இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நுழைவுத் தேர்வை நீக்கினார்கள்.அதன்பிறகு,2010–ல் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் திராவிட

முன்னேற்றக் கழகம் மத்தியில் ஆட்சியில் அங்கம் வகித்த காலகட்டத்தில்தான் நீட் தேர்வு கொண்டு வரப்பட்டது. ஆகவே, நீட் தேர்வு வந்த பிறகு கிராமப்புற மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பு பயில இடம் கிடைக்கவில்லை. நானும் அரசுப் பள்ளியில் படித்தவன் என்பதனால், நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் வாழும் ஏழை, எளிய மாணவ, மாணவியருக்கு மருத்துவப் படிப்பிற்கு இடம் கிடைக்க வேண்டுமென நினைத்தேன், அதற்கு ஒரே வழி உள்ஒதுக்கீடு. இதற்கு எதிர்க்கட்சிகளோ, பொதுமக்களோ கோரிக்கை வைக்கவில்லை. நானே நடைமுறையைப் பார்த்து 7.5 விழுக்காடு உள் ஒதுக்கீடு ஏற்படுத்தியதால், இந்த ஆண்டு 313 மாணவ, மாணவியர்களுக்கு மருத்துப் படிப்புப் பயில இடம் கிடைத்துள்ளது, பல் மருத்துவக் கல்லூரியில் 87 மாணாக்கருக்கு இடம் கிடைத்துள்ளது. அடுத்த ஆண்டு மேலும் கூடுதலாகக் கிடைக்கும். ஏனென்றால், 11 அரசு மருத்துவக் கல்லூரிகளை ஒரே நேரத்தில் தொடங்கியதன் விளைவாக கூடுதலாக 1,650 இடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அதனால், கூடுதலாக 135 மாணவச் செல்வங்கள் மருத்துவப் படிப்புப் படிக்க வாய்ப்பு கிடைத்துள்ளது. எனவே, அடுத்த ஆண்டு ஏறத்தாழ 435 மாணவச் செல்வங்களுக்கு மருத்துவப் படிப்பில் இடம் கிடைக்கும். இவ்வாறு இரவு, பகல் பாராமல் மக்களுக்காக பாடுபடுகிற ஒரே அரசு அம்மாவின் அரசு.

நான் 2011–ஆம் ஆண்டிலிருந்து நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்தேன். பிறகு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அமைச்சரவையில், 2016–ஆம் ஆண்டு, நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித் துறை ஆகிய இரண்டு துறைகளையும் என்னிடம் வழங்கினார்கள். அதன் வாயிலாக, சுவேதா நதியின் பல இடங்களில் தடுப்பணைகள், பாலங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறேன், நல்ல சாலை வசதிகளை செய்து கொடுத்துள்ளேன். ஏரிகள் அமைப்பதற்கும் நிதி ஒதுக்கீடு செய்து இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவற்றுக்கெல்லாம் மேலாக, தலைவாசல் கூட்டு ரோட்டில் ரூபாய் 1,000 கோடி மதிப்பீட்டில், 1,600 ஏக்கர் பரப்பளவில், ஆசியாவிலேயே மிகப் பிரம்மாண்டமான கால்நடைப் பூங்கா அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டு, அடிக்கல் நாட்டியதோடு மட்டுமல்லாமல், அதற்கான கட்டடப் பணிகளும் நடைபெற்று வருகிறது. இதனால், கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி இந்தியாவிலேயே முன்மாதிரித்

தொகுதியாகிவிடும். அங்கே, கால்நடை மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம் வருகின்றபோது, உலகளவில் பிரசித்தி பெற்ற சட்டமன்றத் தொகுதி கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி என்ற பெயரைப் பெறும். இவை அனைத்தையும் செய்த அரசு எங்கள் அரசு என்பதை சுட்டிக்காட்டி, மக்களுக்காக உழைக்கின்ற அரசு எங்கள் அரசு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் கூடுதலாகச் சொல்ல வேண்டுமென்றால், தாங்கள் வசிக்கின்ற பகுதிகளில் வீட்டு மனைப்பட்டாவிற்காக விண்ணப்பித்தவர்களில், தகுதியானவர்கள் அனைவருக்கும் வீட்டு மனைப் பட்டா வழங்கப்படுகிறது. முதியோர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்படுகிறது. பள்ளி மாணவச் செல்வங்களுக்கு ஏராளமான உதவிகள் செய்கின்றோம். அம்மாவின் அரசுதான் மக்களின் அரசு. கிராமப்புற மக்களின் வாழ்வாதாரம் முன்னேற அம்மாவின் அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

மிகச் சிறப்பாக, எழுச்சியாக, முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் விழாவிலே கலந்து கொண்ட அனைத்து நல்ல உள்ளங்களுக்கும், விரைவாக இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த மாவட்ட நிர்வாகத்திற்கும், சுகாதாரத் துறைக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**